தென்னகத்

தலைவன்

ஆசிரியர்: தினகரன்

விலை 16 காசு

விடுதலை பெற்ற அண்ணனுக்கு பொன்னாரம் சூட்டி கண்ணாரக் கண்ட காட்சி...

அண்ணா ஒரு கட்டளையை நிறைவேற்றிவிட்டோம் அடுத்த கட்டளை என்ன? தொடர்ந்து சொல்லுங்கள் பணியாற்ற! துடித்துக் கிடக்கிறோம் நிறைவேற்ற!

— டி. கே. சீனிவாசன் —

இங்கே நாம் எல்லாரும் கூடியிருப்பது அண்ணாவுக்கு மாலை போடுவதற்காக அல்ல. ஒரு கட்டளையை முடித்துவிட்டு, அடுத்த கட்டளை என்ன சொல்கிறீர்கள்? என்று அவரைப் பார்த்துக் கேட்பதற்காகத்தானே தவிர வேறெதற்கும் அல்ல.

ஆகையால் அண்ணா அவர்களே "நீங்கள் கொடுத்த கட்டளையை குறைவற நிறைவேற்றி விட்டோம். எந்தக் கட்டளையை கொடுத்தாலும் நிறைவேற்றக் காத்திருக்கிறோம். எந்தக் கட்டளையை என்றாலும் என்று, கண்ணை மூடிக்கொண்டு சொல்லக் காரணம் அண்ணா கொடுக்கக்கூடிய கட்டளை எப்படியிருக்கும் என்பதை நான் ஏற்கனவே தெரிந்து வைத்திருப்பதால் தான். மக்களுக்கு நன்மைசெய்யாத எந்தக் கட்டளையையும், நமது அண்ணா நமக்கு எப்போதும் அளித்ததே இல்லை.

புயல் வீசியபோது காசு கொடுக்கச் சொன்னார். அதே போல கைத்தறியாளர்கள் துணி தேங்கியிருக்கும்போது அதை விற்றுத் தரச் சொன்னார். நேரு தென்னகத்தைப் பழித்துப் பேசியபோது மறுபடியும் ஒரு 'அடி' கொடுக்கச் சொன்னார்.' அகவிலைப் பொருள் ஏறியிருக்கிற நேரத்தில் சர்க்கார் நெஞ்சிலே பதியும்படி உள்ளே புகுந்து தியாகம் செய்யச் சொன்னார்.

அதே போலத்தான் வடகிழக்கு எல்லையிலே சீனப்படைகள் தாக்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்களுடைய உடலிலே இருக்கிற இரத்தத்தையே தரச் சொல்லுகிறார். அப்படிப்பட்ட கட்டளையைத் தரக்கூடிய நமது மதிப்பிற்குரிய அண்ணா அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தக் கட்டளையை நிறைவேற்றி விட்டோம். அடுத்த கட்டளையைத் தாருங்கள். எந்தக் கட்டளையானாலும் நிறைவேற்றி வைக்கத் தயாராக இருக்கிறோம்.

3-ம் பக்கத் தொடர்ச்சி)

எட்டப்பர்களைப்பற்றி நமக்குக் கவலை இல்லை, அவர்கள் என்ன ஆனார்கள்—என்ன ஆவார்கள் என்பது பள்ளிப் பையன் கூட அறிந்த உண்மை.

நாம் விடுதலைக் கொடி ஏந்தியவர்கள்தான். அடிமைத் தனத்திலிருந்து விடுபட, சபதமெடுத்துக்கொண்டிருப்பவர்கள் தான், இருக்கின்ற உயிரை சுதந்திர திராவிடத்திற்காக இழக்கச் சித்தமாய் இருப்பவர்கள்தான்—ஆனால் பக்கத்து நாட்டுக்காரன் படைகொண்டு இங்குஅடிமைகொள்ள வருகிறானென்றால் பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம்! அந்தப் பரம்பரையுமல்ல நாம்.

சீனக் கழுகுகள் இந்தியத் துணைக் கண்டத்தை வளைத்துவிட வட்டமிட்டுக்கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் அறிஞர் அண்ணா அவாகளின் கட்டளைப்படி நேருவின் கரத்தை வலுப்படுத்தும் பாதுகாவலராய் இருப்போம்!

நாம் ஒவ்வொருவரும் நம்மால் செய்ய முடிந்த தியாகத்தைச் செய்ய உறுதியெடுப்போம்!

வீடு தேடிவந்த தேளின் கொடுக்காம்—நாடு பிடிக்கவந்த சீன வெறிப் படையை விரட்டியடிப்போம்—பின் விடுதலை பெறுவோம்!

—தினகரன்

நீதிகாக்க நெடுவாள் உயர்த்து

— காரை. குன்றூடு கோமான் —

பாரதத்தின் வடக்கினிலே சீனர் தொல்லை
படிப்படியாய் மீறுதுகாண் வகுத்த எல்லை!
பேரமுதத் தமிழோடு கலந்து வீரம்
பைம்பொழிலாய் மணக்கின்ற திராவி டத்து
வீர(ர்)களே! இளைஞ(ர்)களே! விரைந்து வாரீர்!
வண்டோளின் வலிமையினால். நேர்மை கெட்ட
ஈரமில்லாச் சீன(ர்)களின் இடுப்பொ டிப்போம்!
இடிமுழக்கம் செய்தெழுவீர் நமதே வெற்றி! 1

அண்ணாவின் கழகத்தோர் நாமென் றாலும்
அநீதிக்குக் குழிதோண்டல் நமது பண்பு!
பொன்னான திராவிடத்தைப் பிரிப்ப தெங்கள்
பிறப்புரிமை என்பவர்கள் நாமென்றாலும்
புண்ணாக்கி நீதியினைப் புதைப்போர் தம்மைப்
புறங்காலால் ஒறுப்பதுதான் நமது வீரம்!
தண்ணார்ந்த நீதிக்குத் துன்ப மென்றால்
தமிழ்நெஞ்சம் துளியேனும் பொறுப்ப துண்டோ? 2

செங்கோட்டுத் தேர்தலென நினைத்துக் கொண்டு
செங்கொடியார் 'நடுநிலைமை' என்ற போதும்;
அங்காடி நாய்போலச் சீனர் காலை
அண்டிநின்று நக்கிநக்கி உவக்கும் போதும்;
வெங்குருதி தனில்நனைத்த என்புக் கோலால்
மறக்கவிதை தீட்டுகின்ற திருநாட் டோரே!
இங்கிவர்கள் கவலையது (உ)மக்கு வேண்டாம்!
ஈன்றிடுவீர் மூன்றினையும் நீதி காக்க! 3

சங்கத்துத் தமிழெடுத்து வீரம் பாடி
சதிகாரச் சீன(ர்)களின் கொட்டஞ் சாடி
கொங்கொத்த தமிழுக்கோர் பெருமை தேடி
குளிர்வெற்றிச் சங்கொலிப்பீர் திரண்டு கூடி!
எங்கெங்கு நீதிக்கு வருதோ தொல்லை
அங்கங்கு தமிழன்வாள் இசையெ ழுப்பும்!
பைங்கிளியாள் கண்ணகியின் நீதிக் காகப்
பேராவி துறந்தவனின் பொன்னா டன்றோ? 4

நீதிக்கோர் வரலாற்றைப் பெற்ற நாடாம்
நிலைத்தபுகழ் திராவிடத்தின் வேங்கை போல்வீர்!
கோதில்லாக் குணக்குன்றும், அறிவின் ஊற்றும்,
கொஞ்சுதமிழ்க் கோமகனும் அறிஞர் அண்ணா
மேதினியில் சூதெடுத்த சீனர் போக்கு
முற்றியதோர் அநீதியை ஒறுத்தல் நன்றாம்;
தீதில்லை; தவறில்லை என்றார் கேளீர்!
திராவிடமே! உயர்த்திடுவுன் நெடுவாள் தன்னை 5

'சீனாவோர் மலைப்பாம்'பென் றழகாய்ச் சொன்னான்
சீர்மறவன் நெப்போலியன் அறிக மாதோ!
வீணாக வம்புசெய்யும் வீணர் தம்மை
விலாப்புறத்தின் ஈட்டியினால் துளைக்க வாரீர்!
காணாத புதுவீரந் தன்னைக் காட்டிக்
கவிஞ(ர்)குழாம் புகழ்பாட எழுக மாதோ!
தானாக வந்துபகை மூட்டுஞ் சீனா
தகர்ந்துவிழ திராவிடமே! உயர்த்துன் வாளை!

பொதுவுடமை பேசுகின்ற தோழா



மலர்-1 | 4-11-62 | இதழ்-2

தேளின் கொடுக்கே! சீனத்துப் படையே!

வானம் மிரட்டிக்கொண்டிருக்கிறது!
மின்னல் கண்ணைப் பறிக்கலாம்!
பேரிடி, பேய் மழை, பெரும்புயல்!
இவைகளால் எந்த நிமிடத்திலும்
ஆபத்து வரக்கூடிய சூழ்நிலை!
பல விழுதுவிட்ட ஆல்கூட
வேரோடு சாய்ந்து கிடக்கிறது!
இந்தச் சமயத்திலா இந்தப் பயணம்!
சற்று, நின்று—நிதானித்துப் பிறகு தொடங்கலாம்.

'தென்னகத் தலைவன்' ஏடு துவங்குவதற்கு திட்டமிட்டுக் கொண்டிருந்தபொழுது என்மீது பற்றும், பாசமும் கொண்ட பெரியவர்கள், நண்பர்கள் இப்படித்தான் என்னை எச்சரிக்கை செய்தார்கள். இயற்கையின் சீற்றத்தை. இந்த அரசு கழகத் தின்மீது காட்டிவரும் கெடுபிடிக்கு ஒப்பிட்டார்கள்.

அடக்குமுறை, பொய்வழக்கு, பயமுறுத்தல், கூலிகளைவிட்டு கொள்கைக்கு மாசு கற்பித்தல், இத்துணைக்கும் பிறகு கழகத் தைத் தடை செய்யலாம், எப்பொழுது—எந்த வகையில்? இதே சிந்தனை தில்லிவரை!

அரசு அச்சுறுத்திக்கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில் தான் தென்னகத் தலைவனின் பயணம்!

நலம் விரும்பும் நண்பர்களின் அறிவுரை!

நண்பர்களின் கூற்றைச் செவிகள் கட்டாயமாக ஏற்றுக் கொண்டன.

ஆனால், செயல், எண்ணம், ஆர்வம் மின்னல் வேகத்தில் தலைவன் பவனிக்கான பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது.

தலைப்புக்கான பெயரை அரசினரிடமிருந்து பெறுவதி லிருந்து, தென்னகத் தலைவனை குறிப்பிட்டுவிட்ட தேதிக்குக் கொண்டுவருவதுவரை எத்தனையோ தொல்லைகள்! அத்தனையும் கடந்து குறித்த நாளில் ஏட்டை உங்கள் கரத்திலும், கடற்கரை விழாவில் அண்ணன் கரத்திலும் ஒப்படைத்துவிட்டேன். இந் தப் பெருமையில்—முன் ஏற்பட்ட தொல்லைகள் எனக்கு அனு பவங்களாகப் பதிந்துவிட்டதே தவிர, கொஞ்சங்கூட மனத் தளர்ச்சியைத் தரவில்லை.

வாழ்த்துச் செய்தியில் 'முரசொலி' மாறன் அவர்கள் குறிப்பிட் டிருப்பதைப்போல் அரசினர் கடைபிடித்துவரும் எல்லாக் கட்டுப் பாடுகளிலிருந்தும் ஓர் கழகஏடு தன்னைக் காப்பாற்றிக்கொண்டு வெற்றிகரமாகப் பவனி வருவதென்பது மெத்தச் சிரமமான பணிதான்.

வசதிக் குறைவுகளில் வளர்ந்துவரும் நாம், அது நாளேடா யினும் சரி, கிழமை ஏடாயினும்சரி அதை எழிலாகச் சிறப்பாகக் கொண்டுவந்து பொதுமக்களிடம், தோழர்களிடம் நன்மதிப்பை யும் ஆதரவையும் பெறும்வரை, ஒவ்வொருமுறையும் ஒரு பிரசவ வேதனையைத் தாங்கிக்கொள்ள வேண்டியதிருக்கும்!

தென்னகத் தலைவனைப் பொறுத்தவரை தோழர்கள் காட்டி வரும் அன்பும் ஆதரவும் எனக்கு மாற்று மருந்தாக உள்ளது. புதிய தெம்பைத் தருகிறது.

முதல் இதழின் எழிலை, ஏற்றத்தை. சிறப்பைத் தோழர்கள் அதிகமாகப் புகழ்ந்து எழுதியிருப்பதாகவே நான் கருதுகிறேன். உங்கள் பாராட்டுக்கும், சிறப்புக்கும் உரியவகையில் 'தென்னகத் தலைவன்' ஏட்டை ஒவ்வொரு கிழமையும் கொண்டுவர முயற்சிக் கிறேன்.

ஒவ்வொரு வாரமும் எப்படி அமையவேண்டும் என்று கருத் துத் தெரிவித்திருக்கும் அருமைத் தோழர்களுக்கு என் உள மார்ந்த நன்றி! அதை நிறைவேற்றி வைப்பதைவிட வேறு எனக்கு என்ன வேலை?

பம்பாய்ப் பகுதியைச் சேர்ந்த தாராவியில் வசிக்கும் தமிழ் நண் பர் ஒருவர் காங்கிரஸ் கட்சி ஆலை அரசர்களுக்கு அடிமையாக வும், கோடீஸ்வரர்களின் கைப்பாவையாகவும், பெரும் முத லாளிகள் மட்டுமே ஏகபோகமாக அனுபவிக்கக்கூடிய ஒரு ஸ்தா பனமாகவும் ஆகிவிட்டதைக்கண்டித்து கிழமைதோறும் எழுதும் படியும், வரி உயர்வால், விலைவாசி ஏற்றத்தால் பொதுமக்கள் வாழ்க்கைச் சுமை தாங்காது அல்லல்பட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மத்திய அரசும், அதன் அதிகாரிகளும் திட்டம் என்ற பெயரால் விரயமாக்கிக்கொண்டிருக்கும் கோடிக்கணக் கான பணத்திற்குத் தான் சரியான முகாந்திரங்களுடன் புள்ளி விவரங்கள் அனுப்பி வைப்பதாகவும், அதை வெளியிடும்படியும் கேட்டு எழுதியுள்ளார்.

மேலும், வடநாட்டவர், தென்னாட்டின்மீது செலுத்தும் ஆதிக்கம் பற்றியும், விடுதலை உணர்வுத்தீ விரைந்து பரவ கிழமைதோறும் 'தென்னகத்தலைவன்' செயலாற்ற வேண்டுமென்று நீண்ட அஞ்சலொன்றை துடிப்போடு எழுதியுள்ளார்.

விடுதலை உணர்வைத் தூண்டி, மக்கள் ஆதரவைப் பெற்று சுதந்திர திராவிடம் காண்பதுதான் தென்னகத் தலைவனின் இதயம் சார்ந்த கொள்கையாகும்.

ஆனால், இந்தியத் துணைக்கண்டத்திற்கு மண்ணாசை பிடித்த சீன வெறியர்களால், இன்று ஏற்பட்டிருக்கும் பேராபத்தைக் கருதி—திராவிடமென்னும், திங்களடங்கிய இந்தியத் துணைக் கண்டத்தை, சீனக்கம்யூனிஸ்ட் பாம்பிடமிருந்து காப்பாற்றுகிற வரை காங்கிரஸ் எதிர்ப்புப் பிரச்சாரத்தையும், திராவிடநாட்டு விடுதலை முழக்கத்தையும் ஒத்தி வைத்திருக்குமாறு தென்னகத் தலைவராம் அறிஞர் அண்ணா அவர்கள் வேலூர்ச்சிறையிலிருந்து வெளிவந்ததும் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

தலைவனி[illegible] அறிஞர் அண்[illegible] தோடு—நாடு[illegible] நச்சுப் பாம்பு[illegible] துணைக்கண்ட[illegible] பெரும் கடமை தி. மு. க. தோழர்களுக்கு உண்டு.

அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல[illegible] இருந்தால்தான் [illegible] இந்தியத் துணைக் கண்டம் பழுது படாமல் இருந்தால்தான் உரிமையோடு சுதந்திர திரா விடம் பெற முடியும்.

நாம் யாரையும் யாருக்கும் காட்டிக்கொடுப்பவர்கள் அல்ல. ஐந்தாம்படை வேலை செய்கிறவர்கள் அல்ல; துரோகத்திற்குத் துணைபோகிறவர்கள் அல்ல!

இந்தியத் துணைக் கண்டத்தின் எல்லையை வெறிச் செயலால் தாண்டி, மூன்று இடங்களைத் தன் வசப்படுத்திக்கொண்டு, இந் தியத் துணைக் கண்டத்திற்கு இதயமாகஉள்ள, எண்ணெய்வளம் நிரம்பிய அஸ்ஸாம் எல்லையின் விளிம்பை, சீன வெறிப்படை தொட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில்—மக்மகான் எல்லைக் கோட்டை, சீனர்கள் தாண்டிவிட்டார்களா? இல்லையா? என்று கமிட்டியில் கண்துடைப்பு விவாதம் நடத்துவதும், அப்படி அதிகாரபூர்வமாக இந்திய அரசு அறிவிக்கவில்லையே? என்று அரசியல் பாலபாடம் பேசுவதும், நமக்குக் கைவராத கலை, ஆனால் அதுதான் இந்தியக் கம்யூனிஸ்டின் நிலை.

சீனத்துச் சிங்காரியின் துள்ளுச் சிரிப்புக்கு, துடியிடை நெளி வுக்கு, வெட்டு விழிகளுக்கு, பட்டுப் பாதங்களுக்கு ஆண்டாண்டு காலமாகப் பொதுவுடமை அடிப்படையில் அடிமைப்பட்டு. சந் தர்ப்பத்திற்குக்கூட வாய்திறக்க சக்தியற்றுப்போன பச்சைத் துரோகிகள்தான் இந்தியக் கம்யூனிஸ்டுகள்.

இந்த மூன்றுநாட்களாக இந்தியத் துணைக்கண்டத்து எல்லை யைக் காப்பதில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற மோகம், இங்கு கம்யூனிஸ்டுகள் என்ற பெயரால் வாழ்ந்து தீரவேண்டுமே என்ப தால் வந்த தாகம்! உண்மை என்னவென்றால் இரண்டு ஆண்டு களுக்கும்மேலாகநமதெல்லையில்12,000மைல்களைபிடித்துவைத்து விளையாட்டு காட்டிக்கொண்டிருக்கும் சீனக் கம்யூனிஸ்டுகளைப் பற்றி, இந்தியக் கம்யூனிஸ்டுகள் வாய் திறக்காதது ஏன்? ஏன்?

(2-ம் பக்கம் பார்க்க)

உன் பங்காளி கொட்டுகிறான் தேளாய்

சென்னை வாழ் பொதுமக்களே !

பட்டாளத்துச் சிப்பாய் போன்றவன் அண்ணனிடம் பதக்கம் பெற்ற மாவீரன் பாண்டியன்போல் நடைகாட்டி பம்பரம்போல் பணியாற்றிய கொள்கை வீரன் கோ. சு. மணி எங்கே? எங்கே?

கடற்கரை விழாவில் கலைஞர் கருணாநிதி

இன்றைய தினம் அறிஞர் அண்ணா அவர்களையும், என்னையும், மற்ற கெழுதகை நண்பர்களையும், தி. மு. கழக தலைமை நிலையச் சார்பிலும், சென்னை மாவட்டத் தி. மு. கழகத்தின் சார்பிலும் மகத்தான வரவேற்பளித்து மலர் மாலைகளிட்டு, அன்புப் பரிசுகள் அளித்த அனைவருக்கும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழகத்தின் தலைநகரான சென்னையிலே அண்ணா அவர்களை வரவேற்பது போலவே அறிஞர் அண்ணா அவர்களை ஈன்றெடுத்த காஞ்சிபுரத்திலே நாளை மகத்தானதோர் வரவேற்பளிக்க நண்பர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள்.

இன்று சென்னையிலே நடைபெறும், இந்த நிகழ்ச்சி வரலாற்று ஏட்டிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதுஎன்று கருதப்படுகிறதோ, அதேபோன்று காஞ்சிபுரத்திலே நடைபெறவிருக்கக் கூடிய நிகழ்ச்சியும் கருதப்படும்; கருதப்பட வேண்டும்.

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல், சென்னை, வடஆற்காடு, தென்ஆற்காடு அருகாமையிலே உள்ள மாவட்டத் தோழர்களும் இன்று இங்கு கூடியுள்ள எல்லோரும் நாளை நமது தலைவனைப்பெற்றெடுத்த புனித பூமிக்குச் சென்று வாழ்த்தி, வரவேற்பு விழாவை வெற்றிகரமாக நடத்துமாறு, வேண்டிக் கொள்கிறேன்.

சிறையிலே நாங்கள்பட்ட கொடுமைகளை அனுபவித்து விட்டு, உங்களிடம் வந்து எங்களது தியாகத் தழும்புகளைக் காட்டி விழுப் புண்களைக் காட்டி எண்ணிக் களிக்கவில்லை. நீங்கள் இப்போது அளித்த பாராட்டுக்கள் எல்லாம் நாங்கள் இதுவரை செய்த சேவைகளுக்காக அல்ல. செய்ய வேண்டிய பணிகளுக்கு எங்கள் முதுகிலே தட்டிக் கொடுக்கிறீர்கள்; ஏராளமான உற்சாகத்தை அளித்து எங்களை மேலும் மேலும் தூண்டுகிறீர்கள் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

திருச்சி சிறையிலே நானும், நண்பர் டி. கே. சீனிவாசன் அவர்களும், புலவர் ஏ. கே. வேலன் அவர்களும் அடைபட்டுக் கிடந்தோம். வேலூர் சிறையிலே அண்ணா அவர்களும், வடஆர்காடுமாவட்டச் செயலாளரும் மற்ற தோழர்களும் இருந்தார்கள். இன்றைய தினம் விடுதலை பெற்றுள்ளோம். ஆனால், விடுதலை பெற்ற உணர்வை நாங்கள் பெறவில்லை. அதற்குக் காரணம் நமது மதிப்பிற்குரிய நாவலர் சென்னைச் சிறைச் சாலையிலே இருக்கிறார். அருமைமிகு சகோதரர் மதியழகன் சென்னைச் சிறையிலே இருக்கிறார். பேராசிரியர் அன்பழகனும், பல மாவட்டச் செயலாளர்களும் திருச்சி மத்தியசிறையிலேயும், கோவை மாவட்டத்தைச்சேர்ந்தவர்கள் கோவைச் சிறையிலும் அடைபட்டுக் கிடக்கிறார்கள். அவர்கள் இன்றைய தினம் இங்கு 'எழுச்சி கொள் விழா நடைபெற்றுக் கொண்டிருக்குமே, நமது தலைவனுடைய வீர உரை கேட்டுக் கொண்டிருக்குமே, அந்த வீர உரையைக் கேட்க முடியவில்லையே' என்று ஏங்கி இருப்பார்கள்.

சிறை மீண்ட நாங்கள் ஒரு சிலர் 'ஏ' வகுப்பிலும் ஒருசிலர் 'பி' வகுப்பிலும் வைக்கப்பட்டிருந்தார்கள் என்பதுஉண்மை தான் என்றாலும், ஒரு சிலர் 'ஏ' வகுப்பிலும் 'பி' வகுப்பிலும் இருந்த உங்களுக்கு என்ன கொடுமை என்ன வேதனை?'' என்றுகேட்டால், அதுவேதனைதான் என்பதை நடைமுறையிலே விளக்க வேண்டுமானால், 'சி' வகுப்பிலே இருப்பவர்களுக்குப் போடக் கூடியசோறு பட்டையாக இருக்கும்; எங்களுக்குத் தருவது உதிர்த்து விடப்பட்டிருக்கும் இது வித்தியாசமாக இருக்கலாம்.

'சி' வகுப்பைவிட, உயர்ந்தது என்று யாராவது கருதினால் நான் அவர்களுக்குச் சொல்லுகிறேன்.

''எங்களை எல்லாம் 'ஏ' 'பி' வகுப்பிலே வைத்துவிட்டு, எங்களுடைய சகோதரர்களை 'சி' வகுப்பிலே வைத்து, அவர்கள் சோளக் கஞ்சி குடிக்கின்ற அந்தச் சோகம் மிகுந்த காட்சியைப் பாருங்கள்'' என்றுகாட்டினார்களே, அதைவிடவேதனை வேறென்ன வேண்டும்?

சென்னைச் சிறையிலே பலரை அடித்ததால் மார்பிலும், முதுகிலும், கைகளிலும் கால்களிலும் ஏற்பட்டவிழுப்புண்களைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் சொரிந்தோமே அதைவிட வேதனை வேறு என்ன இருக்கிறது என்று கருதுகிறீர்கள்.

ஜூலை 16-ம் தேதி நண்பர்களே! எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. கோடம்பாக்கத்திலே நடைபெற்ற சென்னை மாவட்டமாநாட்டிலேஅண்ணா அவர்கள் உரையாற்றுகின்றபோது, ஒருவன், ஒரு பட்டாளத்துச் சிப்பாய்போன்றவன், பட்டாளத்துமுறையிலேசலாம் செய்து அண்ணா அவர்கள் அணிவித்த பதக்கத்தைப்பெற்றவன் திராவிடநாடு விடுதலை பெற எனது உயிரையும் தருவேன் என்று கூறினானே இன்று நடைபெற்ற ஊர்வலத்திலே பம்பரம்போல் சுற்றியிருப்பானே; பாண்டியனைப்போல் நடை காட்டி யிருப்பானே! அந்தக் கோ. சு. மணி எங்கே? எங்கே? என்று உங்களை நான் கேட்கிறேன்.

திருச்சியிலிருந்து திரும்பினேன். திரும்பிச் செல்லுகையில் பதக்கம் அணிவிக்கும் நேரத்தில் பார்த்து விட்டுப் போனேனே? சென்னை வாழ் பொதுமக்களே கோ. சு. மணி என்ன ஆனான்? அப்படி என்ன இதுமகத்தானதோர்போராட்டமா? நாட்டை விடுவிக்கும் இறுதிப் போராட்டமா? புரட்சிக் கூட்டத்திற்கே நாடு போய் விட்டது என்றுசொல்லக்கூடிய அவ்வளவு பயங்கரமான போராட்டமா? நாட்டு மக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருள்களின்விலை விஷம் போல் ஏறிவிட்டது. அந்தச் சூட்டைத் தணிக்க வேண்டும். என்பதற்காக நடைபெற்ற போராட்டம்.

சென்னை மாநாட்டிலே அண்ணா சொன்னார். 'இது சின்னப் போராட்டம்' என்று அந்தச் சின்னப் போராட்டத்திற்கு நமது அருமைத்தோழர் கோ. சு. மணியைப் பலிக் கொடுத்திருக்கிறோம்.

'எங்கே கோ. சு. மணி என்று கேட்டால் அமைப்புச் செயலாளர் சொல்வார். ''கொஞ்ச தூரம் வாருங்கள்? காட்டுகிறேன் என்று கூட்டிக்கொண்டு போய், அந்த மாமன்னன்—மாவீரன் மறத்தமிழன் புதைந்துள்ள புதைகுழியை அல்லவா நாளையதினம் சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்குக் காட்ட இருக்கிறார்.

ஏன் இந்தநிலை ஏற்பட்டது? கோ. சு. மணி மாத்திரமல்ல. ஸ்ரீ வில்லிபுத்தூரைச் சேர்ந்த பொற்செழியன் என்ற தோழன்மதுரைமாநகரத்திலே உள்ள சிறையில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, அந்தக் கட்டிளங்காளை சாகும் நேரத்தில் மனைவியைப் பார்த்து, அருமைத் துணைவியைப் பார்த்து, ''நான் செத்து விடுவேன்; கவலைப் படாதீர்கள். ஆனால், ஆத்மா என்று ஒன்று இருந்து, அது சாந்தியடையவேண்டுமானால், நான் போன பிறகு என் மக்களையெல்லாம் திராவிடப்

பகை கொண்டு வந்தவனைச் சாடு

போராட்டவீரர்களாக வளர்த்துவா'' என்று கூறி அந்த மாவீரன் கடைசி முறையாகக் கண்களை மூடினுன்.

இப்படிப்பட்ட சோகச் செய்திகள் இந்த 3 மாத காலத்தில் ஏராளம் ஏராளம். வேலூரிலே அண்ணு மறியல் செய்தபோது தண்டபாணி என்ற தோழன் போலீசாரால் துரத்தப்பட்டு, அகழியிலே விழுந்து பிணமாக மிதந்தான்.

அதை நாம் மறந்து விடவில்லை. இன்னும் ஒன்றிரண்டை நினைவுபடுத்த விரும்புகின்றேன். திருச்சி சிறையிலே இன்னும் அடைபட்டுக் கிடக்கிருன் உத்தமபாளையம் தொகுதியைச் சேர்ந்த நமது இராசாங்கம் வெற்றி பெற்ற அந்தத் தொகுதியைச் சேர்ந்த நமது முத்தலாபுரம் என்ற கிராமத்திலே உள்ள இராசு என்ற இளம் வயதுக் காளை 25 அல்லது 26 வயது இருக்கும்.

அவன் சிறைச்சாலை புகும் நேரத்திலே தனது மனைவி மக்களிடம் சொல்லிக் கொண்டால் தனது பெற்ருேரிடத்திலே சொல்லிக் கொண்டால் அனுமதிப்பார்களோ இல்லையோ என்ற பயத்தில், 'காடு கழனிக்குச் செல்லுகிறேன்! என்று கூறி இரவோடு இரவாகப் புறப்பட்டு, மதுரை வந்து—மதுரையிலே போராட்டத்தில் ஈடுபட்டு சிறை புகுந்தான்.

ஒரு செய்தி வந்தது அவனது செவிக்கு. என்ன செய்தி? அவனது வீடு தீப்பற்றி எரிந்து வீட்டிலே இருந்த அவனுடைய அக்காள் பிள்ளை தீயிலே கருகிச் செத்தது என்ற செய்தி.

அது அழுது, அவனுடைய கண்ணீர் கன்னத்திலேயிருந்து துடைக்கப்படுவதற்குள் அடுத்த செய்தி. அவனது மனைவி ஒரு பிள்ளையைப் பெற்றிருக்கிருள். பிள்ளையைப் பெற்றெடுத்த மாடத்தி என்ற அவனது மனைவி மாண்டு விட்டாள் என்ற செய்தி.

கண்ணீர் வழிய நின்ருன். கண்ணீர் துடைக்க எங்களுக்கு சக்தியில்லை. துடைக்க கையை எடுத்தால் எங்கள் கரம் நடுங்குகிறது விரல் நடுங்குகிறது. அதோடு முடிந்ததா? 'அது போகுல் போகட்டும். சிசுவையாவது பத்திரப்படுத்துங்கள்' என்று கடிதம் எழுதினன். அடுத்த வாரம் அந்த பதிலும் வந்தது. அந்த சிசுவும் தப்பவில்லை என்ற செய்தி வந்தது. அரியலூரிலே சண்முகம் என்ற தோழன்—''நான் கரைக்கு வரும்போது அண்ணு எனது மனைவி சோறுகட்டிக் கொடுத்து பத்துத் தொண்டர்களுக்குச் சாப்பாடு போட்டு 'வெற்றியோடு திரும்பி வாருங்கள்'—என்று சொல்லி அனுப்பி வைத்தாள். இன்றைய தினம் அவள் பிணமாகி விட்டாளாம்''—என்று தந்தியைக் காண்பித்தான்.

நான் சிறைச்சாலையிலே நடைபெற்ற அனுதாபக் கூட்டத்திலே பேசும்போது திருச்சிலேயே சொன்னேன்! மனைவியை இழந்த மாவீரனைப் பாருங்கள்—இந்த வீரர்களுடைய திருமுகத்தைப் பாருங்கள்.

''மனைவியை இழந்தாலும், தந்தையைப் பறிகொடுத்தாலும் நான் சிறைச்சாலையிலே தான் சாவேன்'' என்று சொன்ன இந்த இரும்பு நெஞ்சங்களைப் பாருங்கள். இவர்களது தியாகத்திற்கு இணையாக நமது தியாகம் கால் தூசுக்குச் சமம்' என்று சிறைச்சாலையிலே சொன்னேன்.

அப்படிப்பட்ட தியாகிகள் நிறைந்தது திராவிட முன்னேற்றக் கழகம். அப்படிப்பட்ட போராட்டப் பரம்பரை திராவிட முன்னேற்றக் கழகம்.

அந்தக் கழகத்தின் தலைவர் நமது அருமை மிகு அண்ணு சென்னை நகர மக்களால்—தமிழகத்திலே இருக்கின்ற நல்ல இதயங்களால் இன்றைய தினம் வரவேற்கப்படுகிருர். இன்றைய தினம் நாம் அவரிடத்திலே பல கேட்க இருக்கிருேம். நாம் அவருடைய ஆணைகளைக் கேட்க இருக்கிருேம்.

அண்ணுவின் போர்ப்படையில் புதியதோர் படைக்கலன்!

'விஸ்டம்'

(Voice of Wisdom)

ஆங்கில வார ஏடு

ஆசிரியர் : S. தென்னவன் B. E. (Hons.)

16 பக்கங்களுடன் விரைவில் வெளிவருகிறது

தனிப்பிரதி: 16 காசுகள் ஆண்டுச் சந்தா : ரு. 8

முன் பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள்
எல்லா ஊர்களிலும் தேவை.

விவரங்கட்கு.

உ. கணபதி M A.
நிர்வாகி, ''விஸ்டம்'' சென்னை-6.

தென்னகத் தலைவன்!

புலவர் : பொன்னிவளவன்

தென்னகத் தலைவன்! திராவிட மேதை!
என்னக மெல்லாம் எழிலக மாக்கிய
தென்னவன்! மன்னவன்! திராவிடர் படையின்
முன்னவன்! அண்ணன்! முத்தவன்! மக்கள்
சொத்தை அடிக்கப் புத்தி செறுக்கச்
சொத்தை சோடை பித்துப் பிடித்த
மொத்த அறியாமை முழுக்கத் திரண்டு
எல்லாம் தலைவன் என்று நினைப்பர்
பொல்லார் நாட்டில் புதுவழி காட்டிடும்
புத்தி படைத்த மெத்தப் படித்த
நல்ல தலைவன்! நாட்டுத் தலைமைப்பவன்!
பொறுமையின் செல்வம்! பெருமையின் சிகரம்!
கருமை காட்டும் காரிருள் வேளையில்
எழுந்த நிலவாய் எழுந்த தலைவன்!
இருண்டு கிடந்த இந்த நாட்டில்
திரண்டது பெரும்படை! தீர்ந்தது துயரம்!
அறிவு வளர்ந்தது! ஆற்றல் வளர்ந்தது!
அடிமை அகலும் ஆட்சியாளர்தம்!
கொடுமை அகலும் கொள்கை பரவும்!
தென்னகம் பிரியும் தேன்ஆறு நெஞ்சில்
என்றும் பாயும் என்னும் நிலைமை
இவனல் எழுந்தது இவன்யார் என்ருல்
தென்னகத் தலைவன்! திராவிட மேதை!
என்னக மெல்லாம் எழிலக மாக்கிய
அண்ணு! அண்ணு! அறிந்துகொள் தோழனே!

அலமேலு அப்பாத்துரை வரவேற்பு

கழகத்தின் கட்டளைப்படி விலைவாசிக் குறைப்பு அறப்போர் மறியலில் ஈடுபட்டு, மூன்று திங்கள் சிறைத்தண்டனை அனுபவித்து விட்டு வேலூர்ச் சிறையிலிருந்து 26-10-62 விடுதலை பெற்ற **திருமதி அலமேலு அப்பாத்துரை** அவர்களை, சென்னை சென்ட்ரல் புகைவண்டி நிலையத்தில் தோழர்கள் வெற்றிமாலை சூட்டி மகிழ்ச்சி பொங்க வரவேற்றனர்:

அலமேலு அப்பாத்துரை அவர்கள் நேராக கோ. சு. மணியின் கல்லறைக்குச் சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்திவிட்டு—தனது 74-வது வட்டப் பொதுமக்களைப் பார்க்கச் சென்ருர்.

74-வது வட்டச் தாய்மார்கள் அலமேலு அப்பாதுரை அவர்களுக்கு ஆரத்தி எடுத்து வரவேற்று ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

கோட்டைக் கதவைத் தாளிடுங்கள் நாட்டைக் காக்கப் புறப்படுங்கள்

அறிஞர் அண்ணா 'தென்னகத் தலைவன்' இதழை: ஆழ்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்.

தமிழகத்தின் தலைநகரம்

விடுதலை வீரர்களுக்கு விழா எடுத்தமுழு விவரம்

கடற்கரையில் முரசொலித்த அண்ணாவின் வீர உரை

தலைவர் அவர்களே தோழர்களே; நண்பர்களே 98 நாட்கள் உங்களையெல்லாம் காணாதது யாரை இதயத்திற்குள் நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோமோ எந்த நிகழ்ச்சி எங்கள் வாழ்க்கையிலே நல்லதாக ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு நாளும் உங்களையெல்லாம் சந்திக்கின்றவற்றை மாபெரும் பேறுகக் கருதிக்கொண்டு அப்படிப்பட்ட உங்களைச் சந்திக்கின்ற காட்சி 98 நாட்களாக எனக்கும், 100 நாள் கருணாநிதிக்கும் கிடைக்காமல் அடைபட்டுக் கிடந்தோம். கிரிக்கெட் பாஷையிலே சொல்வதானால் நான் 98 'நாட் அவுட்' ஆனால் கருணாநிதி நல்ல அதிர்ஷ்டக்காரர், 100 நாட்கள் செஞ்சரி அடித்திருக்கிறார்.

அவரோடு நண்பர்கள் பலபேரும்-என்னோடு பலபேரும் சிறையிலே அடைபட்டு அங்கே இருக்கின்ற பல்வேறு சங்கடங்களைத் தாங்கிக்கொண்டு இன்றைய தினம் உங்களையெல்லாம் காண்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார்கள் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரை வேலூர் சிறையிலே அடைபட்டுக் கிடந்த எனக்கு, உள்ளே போகிறபோது இருந்த எடைக்கும், வெளியே வந்தபோது இருக்கிற எடைக்கும், கணக்குப் பார்த்ததில் 12½ பவுண்டு குறைந்து விட்டது. இதைச் சொல்வதற்குக் காரணம் 12½ பவுண்டு போய் விட்டது என்பதற்கல்ல. இன்று மாலையிலே மட்டும் 15 பவுண்டு எடை ஏறியிருக்கிறது உங்களைக் காணுகின்ற உற்சாகத்திலே.

மூன்று மாதங்களிலே சிறை 12½ பவுண்டு வாங்கியிருக்கிறதென்றால், ஒரே மாலையிலே நீங்கள் அளித்திருக்கின்ற உற்சாகமும், நீங்கள் எங்களிடத்திலே காட்டுகின்ற அன்பும், பாசமும் உங்களுடைய குடும்ப நிகழ்ச்சியாக இந்த விடுதலை விழாவினை நீங்கள் கருதுவதும், பல்லாயிரக்கணக்கிலே தாய்மார்களும், லட்சக்கணக்கிலே வாலிபர்களும், முதியவர்களும் தோழர்களும் சிறுவர்களுமாகக்கூடி இந்தமாபெரும் ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் நீங்கள் காட்டுகின்ற உற்சாகத்தைப் பார்க்கின்ற நேரத்தில், ஒரே மாலையிலே 15 பவுண்டு கூடியிருக்கிறது என்று கருதுகிறேன்.

"உற்சாகம் தான் உயிருக்கு உணவு. உணவு அவரவர்கள் சாப்பிடுகிற பண்டங்கள். ஆனால் உயிருக்கு உற்சாகத்தை அளிப்பது உணவு. உற்சாகமான வரவேற்புதான். உங்களுடைய நல் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும், சிறையிலே நாங்கள் எத்தகைய கொடுமைகளை ஏற்றிருந்தாலும், அவைகளை எல்லாம் இன்றைய தினம் நீக்கப்பட்டவர்களாகவும், மாசு போக்கப்பட்டவர்களாகவும், மறுபடியும் உங்களுக்காகத் தொண்டாற்றுவோம்என்பதை உறுதியுடன் கூறிக்கொள்வதுதான் உங்களுக்கு நான் காட்டக்கூடிய நன்றியறிதலாகும்.

வழிநெடுக ஊர்வலத்திலே வந்து கொண்டிருக்கிறபோது தாய்மார்கள் குழந்தைகளை எங்கள் பக்கம் திருப்பி "அதோ பார்! அதோ பார்!" என்று சொல்வதும், முதியவர்கள் பக்கத்திலே இருக்கிறவர்களைப் பார்த்து "இவர் தானா? இவர்தானா" என்று கேட்பதும், மாடிகளிலேயும், மொட்டை மாடிகளிலேயும், மரக்கிளை அதிகமில்லாத மரப் பொந்துக்களிலேயும் நின்றுகொண்டு, பல்லாயிரக்கணக்கான மக்கள் எங்களிடத்திலே சொரிந்த அன்பினைப் பார்க்கிற நேரத்தில், நானாக எண்ணிக்கொண்டேன். "இவர்களுக்காக நாம் எதைச் சாதித்தோம்? இவ்வளவு பெரிய அன்பைச் சொரிகிற மக்களுக்குத் திருப்பிச் செய்ய என்ன இருக்கிறது? என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் "இந்த மக்கள் நம்மிடத்திலே எதையும் எதிர்பார்க்கவில்லை; நன்றியறிதலை எதிர்பார்த்து, பலனை எதிர்பார்த்து எதையும் செய்பவர்கள் அல்ல; இதயபூர்வமான அன்பினைச் சொரிகிறார்கள்" என்பதனை எண்ணுகிற நேரத்தில் உள்ளபடி நாங்கள் எல்லாம் நெஞ்சம் விம்முகிற அளவிலே இந்த இடத்தை வந்து சேர்ந்தோம். ஆனால் அந்த நெஞ்சம் விம்முகிற அந்த நிலையில் உள்ளபடி நெஞ்சம் வேதனைக்குள்ளாகுவது போல், நண்பர் கருணாநிதி கூறியது போல் கோ. சி. மணி அவர்களுடைய மறைவும், பொற்செழியன் அவர்களுடைய மறைவும், சிறைக்கோட்டத்திலே இருந்த நேரத்தில் பல தோழர்களுக்கு ஏற்பட்ட இடுக்கண்களையும் எண்ணிப் பார்க்கிற நேரத்தில் பெரிதும் வேதனைப்படுகிறோம். அப்படிப்பட்ட பேரிழப்புகளெல்லாம் இயக்கத்திற்கு ஏற்பட்டு விட்டன.

இவ்வளவையும் மறக்கின்ற வகையில், இவ்வளவையும் கணக்கெடுக்காத வகையில் நாட்டை ஆளுகின்ற காமராசர், கட்டுதிட்டமாக பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு தி. மு. கழகத்தார் சிறை சென்றிருப்பதைக் கேலி செய்து பேசி வருவதைப் பார்க்கின்ற நேரத்தில், உடலிலே ஏற்பட்ட புண்ணின் மேலே வெந்தணலைப் புகுத்துவதைப் போல அவர் ஒரு புறத்திலே பேசிக் கொண்டு வருகிறார்.

இப்படிப்பட்ட கொடுமைகளை தி. மு. கழகம் தாங்கிக் கொண்டாலும், ஜூலை 19-ம் தேதி மறியலிலே ஈடுபட வேண்டும் என்று நான் ஏன் கேட்டுக் கொண்டேன்.

நண்பர் டி. கே. சீனிவாசன் கூறியதுபோல "நான் கட்டளையிட்டேன் என்று கூறி என்னை நான் ஏமாற்றிக்கொள்ள விரும்பவில்லை. நான் ஏன் உங்களை அப்படிக் கேட்டுக் கொண்டேன்? இந்த நாட்டிலே மிகப் பொறுப்பாக தி. மு. கழகம் பணியாற்றிக் கொண்டு வருகிறது.

நாட்டு மக்களுக்கு எந்தக் கட்டம் வந்தாலும், நாட்டு மக்களுக்கு எந்தத்தொல்லை வந்தாலும், அது கல்லக்குடி என்பது டால்மியாபுரம் என மாற்றப்பட்டாலும், கைத்தறித் தொழிலாளர்களுக்குக் கண்ணீர் வடிக்கக்கூடிய கட்டநிலை வந்தாலும், வேறு வேறு தொழில்கள் எல்லாம் வடக்கே அமைக்கிறார்கள், தெற்கே ஏன் அமைக்கவில்லை?-என்ற நிலை ஏற்பட்டாலும், தமிழ் நாட்டுத் தலைவர்களை தரக் குறைவாக வடநாட்டு வண்களானர்கள் ஏசுகிறார்கள் என்றாலும், எல்லையிலே தேவிகுளமும், பீர்மேடும் தமிழர்களுக்குத்தான் சேரவேண்டும் என்ற அந்தப் பிரச்னையானாலும், விலைவாசி ஏற்றப் பிரச்னையானாலும், எந்தப் பிரச்னையானாலும் தி. மு. கழகம், மக்கள் இயக்கமாக நின்று தொண்டாற்றுகிறது.

அந்தப் பண்பாட்டு வழியில், அந்தப் பரம்பரைக் குணத்தின் வழியில் இன்றைய தினம் தி. மு. கழகம் வடகிழக்கு எல்லைப் புறத்திலே ஏற்பட்டிருக்கிற இந்தப் பெருத்த அமளியில், சீனர்கள் படையெடுக்கிற இந்த பயங்கர ஆபத்திலிருந்து இந்தியத் துணைக்கண்டம் விடுதலைபெற்று, இந்தியத் துணைக் கண்டத்திற்கு வந்திருக்கிற பேராபத்து, நம்மையும்சேர்ந்த பேராபத்து என்ற எண்ணத்தில்தான் தி. மு. கழகம் இந்தப் போராட்டத்தில் தன்னையும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று விடுதலையாகி வெளிவந்த அன்றைய தினமே நான் வேலூர் பொதுக்கூட்டத்திலே பேசினேன். அதற்குப் பிறகு நான் அறிக்கைகளை வெளியிட்டேன். அதை இந்தக் கூட்டத்திலே நான் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் நண்பர் டி. கே. சீனிவாசன் "புதிய கட்டளை என்ன கொடுக்கிறீர்கள்" என்று குறிப்பிட்டார்கள். நீங்கள் அதை உணர்வீர்களோ இல்லையோ உள்ளபடி உலக வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்துப் பார்க்கின்றவர்கள், இப்போது வடகிழக்கு எல்லைப் புறத்திலே ஏற்பட்டிருப்பது பெரும் தொல்லை என்ற அளவிலே கருதக் கூடாது. வந்திருப்பது மிகப் பெரிய ஆபத்து என்பதும், இந்தியத் துணைக்கண்டத்தின் மீது பாய்ந்து வரும் சீனர்கள் ஏகாதிபத்திய வெறிபிடித்தவர்கள் என்பதும், மண்ணாசை பிடித்தவர்கள் என்பதும், செத்தாகிலும் தங்கள் நாட்டை வளப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலே, 1 கோடி பேரைப் பலி கொடுத்தாகிலும் பிற நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஏகாதிபத்ய உணர்ச்சியோடு பாய்ந்து வருகிற ஒரு இராணுவ வெறிக் கும்பல் என்பதை நாம் இந்த நேரத்தில் மறந்து விடுவதற்கில்லை.

வடகிழக்கு எல்லைப்புறத்திலே நடக்கின்றபோராட்டத்தில் தி. மு. கழகம் நேரு சர்க்காருக்குத் துணையாக இருக்க வேண்டும்; இந்தியத் துரைத்தனத்திற்கு ஆதரவாக இருக்க வேண்டும். போர் ஆதரவு முயற்சிகளில் தி. மு. கழகம் முழு மூச்சாக இறங்க வேண்டும் என்று நான் அறிக்கை வெளியிட்ட நேரத்தில், ஒரு சில நண்பர்கள் என்னைத் தனிப்பட்ட முறையிலே கேட்டார்கள். "எங்கோ நடக்கிற சண்டைக்கு, வடநாட்டிலே நடக்கிற சண்டைக்கு, டெல்லிக்கு வந்திருக்கிற ஆபத்திற்கு நாம் ஏன் அக்கறை காட்ட வேண்டும்" என்று விபரம் தெரியாமல் கேட்டார்கள்.

அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வேன். "தி. மு. கழகத்தின் இலட்சியம் "திராவிடநாடு திராவிடருக்கே" என்பது. இதிலே ஒளிவு இல்லை; மறைவு இல்லை; தட்டுத்தடங்கலில்லை! இதை விட்டுவிடப் போவதில்லை. நம்மை விட்டு உயிர் போகின்ற வரையில் நமக்கு இருக்கின்ற வேலை அந்த இலட்சியத்திற்காகப் பணியாற்றுவதுதான்.

ஆனால் "திராவிடநாடு திராவிடருக்கே" என்று சொல்லுகிற நேரத்தில், எதிலே இருந்து நாம் பிரிய விரும்புகிறோம்? இந்தியத் துணைக்கண்டத்திலே இருந்து பிரிய விரும்புகிறோம். ஆக இந்தியத் துணைக்கண்டம் இருந்தால்தான், அதிலிருந்து திராவிடத்தை பிரிக்கலாமே தவிர, இந்தியத் துணைக்கண்டத்தையே சீனாக்காரர்கள் அழித்துவிட்டால் - அபகரித்துக்கொண்டால் அழிந்த இடத்திலேயிருந்து அழகான திராவிட நாட்டைப் பெற முடியாது.

ஆகையினால் திராவிட நாடு திராவிடருக்கே ஆக வேண்டும் என்ற நமது இலட்சியத்திற்கும், இந்தியத் துணைக்கண்டத்திற்கு வந்திருக்கின்ற பேராபத்து நம்மையும்சேர்ந்த பேராபத்து என்பதை உள்ளூர உணர்ந்து, சீன ஏகாதிபத்திய வெறியை அடக்கித் தீர்க்கின்ற போராட்டத்தில் ஈடுபடவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டதும் முரண்பாடானதல்ல. இதை ஓரளவுக்குப் புரிந்துகொள்ள வேண்டுமானால், நண்பர்களுக்கு நான் சொல்லுவேன், "வீடு இருந்தால்தான் வீட்டினுடைய ஓடு மாற்ற முடியும். வீடு பறிபோய்விட்டால் ஓடு மாற்ற முடியாது.!'

ஆகையினால்தான் வீட்டிற்கு வந்திருக்கிற ஆபத்துபோன்ற மாபெரும் ஆபத்து இந்தியத் துணைக்கண்டத்திற்கு ஏற்பட்டிருக்கிறபொழுது பதினாறாயிரம்அடிஉயரத்திலும், 12000 அடி உயரத்திலேயும் பயங்கரமான பனிச் சரிவுகளிலேயும். இந்தியாவினுடைய மானத்தையும், இந்தியாவினுடைய உரிமைகளையும் பாதுகாப்பதற்காக ஜனநாயகத்தின் சார்பிலே போராடுகின்ற வீரர்கள் நம்முடைய வாழ்த்துக்கும், பாராட்டுக்கும் உரியவர்கள்.

நான்கு நாட்களுக்கு முன் போளூரிலேபேசியபோதுநான் இதைக் குறிப்பிட்டேன்

முதன்முதல் இந்தபோராட்டம் நடக்கின்றநேரத்தில் திராவிடமுன்னேற்றக்கழகசார்பாக மதிப்புமிக்க நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன்அவர்கள்75000 ரூபாய்களை நன்கொடையாகக் கொடுத்தார். இந்தப் போர் முயற்சிக்கு ஆதரவாகத் திரட்டப்படுகின்ற பணத்தில் முதல் காணிக்கை முன்னேற்றக் கழகத்தினுடையது. அதிலே நான் பெருமைப்படுகிறேன்.

அதைப்போலவே சீனஏகாதிபத்தியத்தை முறியடிப்பதற்காக நடத்தப்படுகிறபோராட்டத்தில் முதல் பிணம் விழுவதும், முதல் இரத்தம் கொட்டப்படுவதும் தமிழனுடையதாகத்தான் இருக்கும் என்று நான் யூகிக்கிறேன். ஆனால் அதன் முழு விபரங்களை டெல்லிக்குச் சென்று திரும்பி வந்து நான் சொல்லுகிறேன்' என்று நாலுநாளைக்கு முன்னே போளூர் பொதுக் கூட்டத்திலே சொன்னேன்.

மறுநாள் வருகிற பத்திரிகைகளைப் பார்க்கிறேன் தூத்துக்குடியைச் சேர்ந்த செல்வராஜ் என்ற வீரன் இங்கிருந்து பட்டாளத்திலே பணியாற்றச் சென்றவன் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுமரணமடைந்தான் என்ற செய்தியை தந்தி மூலம் அவருடைய இல்லத்தார்க்கு அனுப்பினார்கள்.

அதைப் படித்த அவருடைய மனைவி கதறி அழுதார்கள் என்று பத்திரிகையிலே நாம் படித்தோம். ஆக, முதல் பிணம். கீழே விழுத்தப்பட்ட பிணம் தமிழனுடையதாகத் தான் இருக்கிறது. தமிழன் எப்போதும் தரணியிலே எந்த அக்ரமம் என்றாலும், எந்த இடத்திலே அநீதி தலைதூக்கினாலும், எந்த இடத்திலே அறநெறிதவறினாலும், எந்தஇடத்திலே அடித்துப் பிடுங்குகிற ஏகாதிபத்திய வெறி தலைகாட்டினாலும், தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறான், ஆகையினால்தான் அதே பண்பாட்டின் வழியில் தலை கொடுத்திருக்கிறான். ஆகையினால்தான் இன்றையதினம் தமிழ்நாட்டு வீரர்கள் இந்திய சீன எல்லையிலே நின்று கடும் பனியினாலே கொட்டப்பட்டு, பனிச் சறுக்கினாலே வழுக்கி விழாமலும், பயங்கரமான டாங்கிப் படைகளுக்கு முன்னாலே வீரமாக நின்று போராடிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வீரப் போர் புரிகின்றவர்கள் நம்முடைய வாழ்த்துக்குரியவர்கள், பாராட்டுக்குரியவர்கள் என்பது மட்டுமல்ல, அவர்களை ஆதரிக்க, நாம் முழு வேகத்தோடு ஆதரிக்க, முழு மனதோடு ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தச் சர்க்கார் போகிற போக்கையும், இந்தக் காங்கிரஸ் கட்சியினுடைய நினைப்பையும் கவனிக்கிற நேரத்தில் எப்படியண்ணா மனம்வரும் என்று சிலபேர் கேட்கக்கூடும்,

அதிலும் நண்பர் நடராசனுக்குக் காமராசருடைய பேச்சைக் கேட்டுக் கேட்டு ஏற்பட்டிருக்கிற மனக்கிலேசத்தினாலே என்னைப் பார்க்கிறபோதெல்லாம் சொல்லுகிறார் "காமராசர், அண்ணா; உன்னை அவன்,



வெற்றிகொண்ட வீரர்களை சென்னைத் திருநகரம் வரவேற்ற காட்சி! கி. மனோகரன், என். வி. என். ஏ. கோவிந்தசாமி, சிட்டிபாபு, செங்குட்டுவன் ஆகியோர்.

தம்பி! உன் குருதியில்தான் எனக்கு நம்பிக்கை இருக்கிறது! நாட்டைக் காக்க அதைக் கொடு! எனக் கடற்கரையில் அண்ணன் முழங்கிய காட்சி!



விடுதலை வீரர்களின் வெற்றிப் பவனி! அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, அரங்கண்ணல், சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் ஆகியோர்.

சவத்தைக்கூட விட்டு ஸ்டாலின் நிலையை மாஸ்கோ பாடத்தை சர்வாதிகாரத்தை ஜனநாயகத்தை

தம்பீ!

"கட்சி என்பது ஒன்று· சர்க்கார் என்பது மற்ருென்று. நாடு என்பது முற்றிலும் வேருனது. கட்சி என்பது இன்றிருந்து நாளைய தினம் பொதுமக்களுடைய ஆதரவு கிடைக்காவிட்டால் கீழே இறக்கப்பட வேண்டியது. சர்க்கார் என்பது அதைவிட நிரந்தரமானது. அந்தச் சாக்காரை இன்றைய தினம் காங்கிரஸ் கட்சி நடத்திக் கொண்டிருக்கலாம். இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானுல் சர்க்காரை நடத்துகின்ற இடத்திலே காங்கிரஸ் கட்சி அமர்த்தப்பட்டிருக்கலாம். நாளைய தினம் மக்களுடைய பேராதரவு கிடைத்தால் முன்னேற்றக் கழகம் சர்க்காரை நடத்துகின்ற கட்சியாகலாம்.

ஆனுல், சர்க்காரையும் மீறியது ஒரு நாடு. ஆகையினுலே இன்றைய தினம் நாட்டுக்கு ஆபத்து என்பதனுலே, சர்க்காருடைய கொடுமைகளையும், சர்க்காரை நடத்துகின்ற காங்கிரஸ் கட்சியினுடைய கேவலத் தன்மையும் எட்டிப் பார்த்துக்கொண்டு, நாட்டைக் காப்பாற்றுகின்ற பிரச்சினையில் நாம் தவறு இழைத்துவிடக்கூடாது.

ஆகையினுல் கட்சி, சர்க்கார், நாடு, இந்த மூன்றையும் நீங்கள் அருள் கூர்ந்து மனதிலே அலசிப் பார்ப்பீர்களேயானுல் 'இந்தசர்க்கார்கார் இவர்களுக்குத்தானு சொந்தம்? இந்தச் சர்க்கார் இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்னுலே கேரளத்தைப் பொருத்தவரையில் கம்யூனிஸ்டுகளுக்குச் சொந்தமாக இல்லையா? அதேபோல் தமிழகத்தைப் பொருத்தவரையில், இன்றைய அரசியல் நிலை இதே விதத்திலே போய்க்கொண்டிருக்குமானுல், அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு, இந்த சர்க்காரை நடத்துகின்ற வாய்ப்பு தி. மு. கழகத்திற்குக் கிடைக்காது என்றுயாரும்சொல்லுவதற்கில்லை

ஆகையினுல்தான் சர்க்காரின் பேரிலே கோபித்துக் கொண்டு காங்கிரஸ் கட்சி பேரிலே கோபித்துக் கொண்டு சர்க்காரின் பேரிலே கோபத்தை வரவழைத்து சர்க்கார் மீதிலே இருக்கிற கோபத்தினுலே, நாட்டின் பேரிலே படையெடுப்பு நடக்கின்றபோது, நாம் நம்முடைய கடமையைச் செய்யத் தவறிவிடக்கூடாது.

இவன் என்று பேசுகிருரே" என்று வருத்தத்தோடு சொல்லுகிருர். நம்மை அவன் இவன்என்றுசொல்லச் சொல்ல அது அவருக்கும் நமக்கும் இருக்கின்ற பண்பாட்டு வித்தியாசத்தைக் காட்டுமே தவிர, அவர் யார்? நாம் யார்? என்று உலகம் தெரிந்துகொள்ள உதவுமே தவிர, நாமும் அவரைப் போல 'அவன் இவன்' என்று ஆரம்பித்தால் அதற்குப் பிறகு இவர்கள் என்னுடைய தம்பிகளுமல்ல, நான் அவர்களுடைய அண்ணனுமல்ல இது தி. மு. கழகமுமல்ல என்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

ஆகையினுல்தான் அவர்கள் தாக்குகிருர்களே என்பதற்காக நாம் இந்தப் பிரச்சினையிலே அக்கறையற்றிருக்கக் கூடாது.

இந்தப் பொறுப்புள்ள நிலை; யைத் தி. மு. கழகம் உணர்ந்திருக்கிற காரணத்தினுலேதான், நான் வேலூர்த் துணைச் சிறையிலே அடைபட்டிருந்த நேரத்தில், பண்டித நேருவிடமிருந்து கிடைத்த தந்திக்குப் பதிலளிக்க நேரிட்டபொழுது இதையே நான் குறிப்பிட்டேன்.

"நான் சிறையிலே இருப்பதாலே நீங்கள் குறிப்பிட்டபடி வர இயலவில்லை. ஆனுல் எல்லைப்புறத்தைப் பர்துகாக்க நீங்கள் எடுத்துக்கொள்ளுகின்ற தக்கமுயற்சி அத்தனைக்கும் எங்களது முழு ஒத்துழைப்பும் உண்டு"—என்று தந்திகொடுத்தேன்.

வெளியே வந்தவுடனே அறிக்கை வெளியிட்டிருக்கிறேன்.

இதை நான் சொல்லுவதற்குக் காரணம், நம்முடைய தோழர்கள் மறுபடியும், மறுபடியும் காங்கிரஸ் கட்சியின் பேரிலே இருக்கின்ற கோபத்திலே, இதே கோபத்தைக் கொண்டுவந்து இந்தப் பிரச்னையைகலக்கவேண்டாம். நான் சொல்வது நம்முடையதோழர்களுக்குக் கொஞ்சம் பிடிபடாமலிருந்தால்,

"தாய்மார்களைப் போய்க் கேளுங்கள். சமையலுக்காக அம்மியிலே மிளகாய் அரைப்பார்கள். மிளகாயை அரைத்தெடுத்த பிறகு அதிலே வேறு பண்டத்தை அரைத்தெடுக்க வேண்டுமானுல், மிளகாய் அரைத்த அம்மியை நன்ருகக் கழுவி விடுவார்கள். இல்லையென்ருல், இந்தக் காரம் போய் அந்தப் பண்டத்திலே சேர்ந்து எதற்கும் உபயோகமில்லாமல் போய்விடும். ஆகையினுல் இதுஅம்மியைக் கழுவவேண்டிய காலம்.

கொஞ்சம் நீங்கள் அந்தக் காரத்தைக் கழுவி, புதுப் பண்டத்தை அம்மியிலே வைத்து அரைத்து, அடுக்களைக்குச் சென்று சமைக்க வேண்டியதைச் சமைத்து, அந்த வெற்றிச்சமையலுக்குப்பிறகு, அதை நாம் அவர்களுக்கும் சேர்த்துப் போட்டு, அதை அவர்கள் சாப்பிட்டு ஏப்பம் விடுகின்ற பொழுது "ஐயா. இப்பொழுதாவது நாங்கள் யார் என்று தெரிகிறதா?" என்று கேட்பதற்கேற்ற உறுதியை நாம் பெறவேண்டும்.

ஆகையினுல்தான், நம்முடைய தோழர்கள் காங்கிரஸ் எதிர்ப்புப் பிரச்சாரம் செய்வதைச் சிறிது காலத்திற்கு நிறுத்தி வைக்கவேண்டும்,

அப்படி நிறுத்தி வைத்துவிட்டால். 'போய்விடுமோ' என்று பயப்படாதீர்கள்.

சில வித்வான்களுக்குத்தான் நான்கு நாட்களுக்குப் பாடாவிட்டால் தொண்டை கட்டிவிடும். நல்ல பரம்பரை வித்துவானுக்குப் பத்துநாள் பாடாவிட்டாலும்விட்ட இடத்திலேயிருந்து சிட்டிகை போட்டு பாட ஆரம்பிக்கலாம். ஆகையினுல்தான் எங்கே இதை விட்டுவிட்டால் கெட்டுப் போகுமோ என்று பயப்பயப்படாதீர்கள். அவ்வளவு பலவீனர்கள் நாம் அல்ல.

ஆகையினுல் தி. மு. கழகம் இந்தப் பயங்கர சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றநேரத்தில் மிகப் பொறுப்புள்ள ஓர் அரசியல் அமைப்பு என்ற முறையில் நாம் நடந்துகொள்ளவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்,

"பட்டாளத்திலே சேரக் கூடியவர்கள் பட்டாளத்திலே சேருவதும், இரத்ததானம் கொடுப்பவர்கள் இரத்த தானம் கொடுப்பதும், பண உதவி செய்யக்கூடியவர்கள் பண உதவி கொடுப்பதும், போர்பீதி ஏற்படாமல் பொதுமக்களுக்குத் தெளிவு ஏற்படுத்துபவர்கள், தெளிவுஏற்படுத்துவதும் ஆகிய இந்தத் துறையிலே தி. மு. கழகம் ஈடுபட வேண்டும்.

பெரியபாங்கராத்து[illegible] ஹிட்லராலே மூட்[illegible] நேரத்தில் காங்கிரஸ்காரர்கள் அது இந்தியாவுக்கு ஆபத்து என்பதை உணராமல் அந்த யுத்தத்திற்கு ஒத்துழைக்காமல் இருந்தார்கள்.

அந்த நேரத்திலே என்னைப் போன்றவர்கள் யுத்த ஆதரவுப் பிரச்சாரத்தை நடத்தினேம். ஆனுல், சில காங்கிரஸ் அமைச்சர்கள் விபரம் தெரியாமல் பேசுவதைப் போல், சம்பளம் வாங்கிக்கொண்டல்ல, சம்பளம் வாங்காமல் யுத்தப் பிரச்சாரத்தைச் செய்தவன் நான். சம்பளத்தை வாங்கிக்கொண்டு யுத்தப் பிரச்சாரம் செய்தவர்தான், அதற்குப் பிறகு காங்கிரஸ் மந்திரியானபரமேஸ்வரன் அவர்கள். அதைப் போலத்தான் இன்றையதினமும் காங்கிரஸ் கட்சியினிடத்திலே நாங்கள் எதையும் எதிர்பார்க்காமல் இந்தக் காரியத்திலே ஈடுபடுகிறேம். எதையாவதுஎதிர்பார்ப்பவர்களானுல் இதையாவது கேட்டிருக்க மாட்டேனு; எங்களது நாவலர் நெடுஞ்செழியன் அவர்களையாவது விடுதலை செய்யுங்கள்'—என்று கேட்க வாய் வராதா?

ஆனுல், அவர்களுக்கே அந்தப் பெருந்தன்மை வராதா என்று காத்துக்கொண்டிருக்கிறேனே தவிர நானுகப்போய் அவர்களை விட்டுவிடுங்கள் என்று கேட்கத் தயாராக இல்லை.

ஆகையினுல் காங்கிரஸ்கட்சியினரிடத்திலும், காங்கிரசை நடத்துகின்ற சர்க்காரிடத்திலும் எந்தவித சலுகையையும் எதிர்பார்க்காமல், இந்த யுத்தப் பிரச்சாரத்திலே ஈடுபட்டு இன்றையதினம் நாட்கள் நாலாகின்றன.

பொதுமக்களும், நண்பர்களும் சொல்கிருர்கள், 'நீங்கள் இந்த யுத்தப் பிரச்சாரத்திலே ஈடுபட்ட பிறகுதான், சீனப்

நேருவின் கரத்தை வலுப்படுத்துவோம்

வைக்காது சர்வாதிகாரம்
எண்ணிப்பாருங்கள்
மனதில் வையுங்கள்
விரட்டியடிப்போம்
வாழவைப்போம்

படையெடுப்பு என்பது எவ்வளவு ஆபத்துஎன்பது புரிகிறது' என்று சொல்லுகிறார்கள். அது உண்மையும் கூட.

ஏனென்றால், விஷயத்தைச் சொல்லுகின்றபோது புரிந்துகொள்ளவேண்டும். அதற்குப் பிறகு புரிய வைக்க வேண்டும். அதற்கும் மேலாக உள்ளத்திலே எந்தவிதமான குழப்பமும் இருக்கக் கூடாது.

'மக்மகான் எல்லைக்கோடு சரியா; தவறா? என்று ஒரு கமிட்டியிலே குழப்பமும், மக்மகான் எல்லைக் கோட்டிலே அவன் தாண்டினானா? இல்லையா? என்பதை இன்னொரு கமிட்டியிலே குழப்பமும், அவன் இரண்டு காலால் தாண்டினானா? அல்லது ஒரு காலை வைத்தானா என்பதை விவாதித்துக் கொண்டிருக்கின்ற பரிதாபத்திற்குரிய கம்யூனிஸ்ட்களைப்போல் நாங்கள் குழப்பநிலையிலே இல்லை. தெளிவாக திட்டவட்டமாக இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற இந்தப் பேராபத்தைத் தடுத்துநிறுத்தியாக வேண்டும். சீனர்கள் இந்தியத் துணைக் கண்டத்திலே எடுத்து வைத்திருக்கின்ற காலடி திரும்பப்பெறுகின்ற வரையில் நாம் மற்ற காரியங்களை எல்லாம் மறந்து ஈடுபட வேண்டும் என்று நாங்கள் வெளிப்படையாகக் கூறுகிறோம்.

அதற்குக் காரணம், எங்களுக்கும், சீனாவுக்கும், சீனாவை ஆட்டிப் படைக்கின்ற கட்சிக்கும், எங்களுக்கும் பந்தமில்லை; பாசமில்லை.

அந்தப் பந்தபாசத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள் எப்படியடா அதை விட்டுவிடுவது என்று குழப்பமடைவார்களேயானால் "மனமே தெளிவுபெறு" என்று கூறுவதைத் தவிர அவர்களுக்குநான் வேறேதும்சொல்லப்பிரியப்படவில்லை.

ஆனால் வந்திருக்கின்றபேராபத்தைஉணர்ந்து,தி.மு. கழகம் முழுமூச்சுடன் இறங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்ற நேரத்தில், நாம் ஈடுபட்டுள்ள விடுதலை உணர்வை விட்டுவிடுவோம்என்று யாரும் எண்ண வேண்டாம், சந்தடி சாக்கில் அண்ணாதுரை இதை விட்டுவிடுவான் என்று தப்புக் கணக்குப் போடாதீர்கள்.

சுலபத்திலே நான் எதையும் மனதிலே பதியவைப்பதில்லை. ஆனால், என் மனதில் பதிந்துவிட்ட எதையும், மனதிலே இருந்து நீக்க முடியாது. அது என்னைச் சிறு பிராயத்திலே இருந்து தெரிந்தவர்களுக்குப் புரியும்.

ஆகையினால் இப்போதிருக்கின்ற நிலைமையில், கண்ணியமான அந்த முடிவுக்கு தி. மு. க. தோழர்கள் ஈடுகொடுப்பார்கள் என்பதிலேயும், அதற்கு நல்ல ஆதரவு கொடுப்பார்கள்என்பதிலேயும் எனக்கு ஒரு துளியும் ஐயப்பாடில்லை. நான் பொதுச் செயலாளர் என்ற முறையிலே எனக்கு ஐயப்பாடு இல்லை.

இத்தனைக்கும் நண்பர்களை எல்லாம் கலந்து பேசக்கூடிய நிலையிலேநான்இல்லை. வேலூர் மத்திய சிறையிலே நான் இருந்தேன். சென்னை மத்திய சிறையிலே நாவலர் இருக்கிறார். திருச்சி மத்திய சிறையிலே கருணாநிதியும் மற்றவர்களும் என்றால் நான் இந்த முடிவை எடுத்து, அவர்கள் வெளியே வந்ததும் அவர்களைப் பார்த்தவுடன் அவர்களும் இந்த முடிவிலேதான் இருக்கிறார்கள்என்பதைப் பார்த்த உடனே இது அல்லவா குடும்பம் என்று என்னை நானே பாராட்டிக் கொண்டேன்.

ஆகையினால் தி. மு. கழகம் இப்போது ஏற்பட்டிருக்கின்ற பேராபத்தை நீக்கவும், இந்தப் பேராபத்தைப் போக்கவும், முழு மூச்சுடன் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் நடராசனே சொன்னார்: "அண்ணா இரத்ததானம் என்றார், என்னை கேட்காமலிருக்கிறார், நான் உயிரையே விடுகிறேன்"—என்றார்.

நான் உள்ளபடி இரத்ததானம் கொடுக்க வேண்டும் என்று கேட்பதற்கு முக்கியமான காரணம் வடகிழக்கு எல்லைப்புறத்திலேயும், லடாக் பகுதியிலேயும் கடுங்குளிராலே அடைபட்டு, ஆபத்தானநேரத்திலே, குத்துயிராகக் கிடக்கின்ற நேரத்தில் இரத்தத்தை ஊட்டினால்தான் பிழைக்க வைக்க முடியும்.

நண்பர்கள் நீங்கள் கேட்கலாம், "அது என்னண்ணா எங்களது இரத்தத்தையே கேட்கிறீர்களே"—என்று கேட்கலாம். நண்பர்களே, தோழர்களே உடன் பிறந்தார்களே உங்கள் இரத்தத்தில் எனக்கு அவ்வளவு மதிப்பு.

தப்பித் தவறி ஊரார் சொத்தை அடித்து உலையிலே போடுகிறவர்கள் இரத்தத்தை அங்கே கொடுத்தால் அவன் சண்டை போடுவதற்குப் பதிலாக, ரண களத்திலே கிடக்கின்ற துப்பாக்கிகளை திருடிக் கொண்டு வந்து கள்ளமார்க் கெட்டிலே விற்க ஆரம்பித்து விடுவான்,

"கதவைச் சாத்துகின்றபோது கதவு இடுக்கிலே விரல் பட்டு விரல் நசுங்கிப் போகலாம். நம்முடைய விரலை நசுக்கியது கதவு தானே; இது அப்படியே திறந்து கிடக்கட்டும் என்று புத்தியுள்ள எந்த வீட்டுக்காரனும் இருக்கமாட்டான்.

கொஞ்ச வேதனையோடு விரலை அழுத்திக்கொண்டு, கதவைத் தாழிட்டு உள்ளே வருவானே தவிர, நம்முடைய விரலை நசுக்கிய இந்தக் கதவு திறந்தே கிடக்கட்டும். வழியே போகின்ற நாயெல்லாம் உள்ளே நுழையட்டும்—என்று யாரும் இருக்கமாட்டார்கள். ஆகையினால்தான் நம்முடைய விரலை நசுக்கியவர்களை மறப்போம்; மன்னிப்போம்.

நம்முடைய கோட்டைக் கதவுகள் பலமாகத்தாழிடப்பட்டு, எந்த எதிரியும் உள்ளே நுழையாதபடி, அதற்கு முன்னாலே நின்று வீரப்போர் புரிகின்ற ஓர் சூழுரையை 'நீங்கள் எல்லாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால், என்னைப் பொறுத்தவரையில், என்னோடு பேசிய நண்பர்களும் இதனை உணருகிறார்கள். இப்போது நேர்ந்திருக்கின்ற யுத்தத்தை பெரும் பீதி கிளப்புகின்ற காரியமாக நாம் உள்ளபடி கருதவில்லை.

மிகப் பயங்கரமான இருண்ட எதிர்காலம் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறதோ? என பீதிகொள்ளத்தக்கவிதத்தில் சீனப் படையெடுப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அந்த சீனப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால், இந்த நாட்டிலே இருக்கின்ற எல்லா அரசியல் கட்சிகளும் தங்கள் தங்கள் அலுவல்களைச் சிறிது காலத்திற்கு ஒத்தி வைத்துக் கொண்டாக வேண்டும்.

ஆங்கிலத்திலே ,மாரடோரியம்' என்பார்கள். அந்தந்தக் கட்சிகளும், அவரவர்களுக்கு இருக்கின்ற சில காரியங்களை ஒதுக்கி வைத்தாகிலும் இந்த நேரத்திலே போர் வெறியை முறியடிக்கின்ற காரியத்திலே ஈடுபட வேண்டும்.

சென்னையில் உங்கள் பிரதிநிதி

திருமணம், விருந்து, கூட்டம் போன்றவைகளையும், நாடகம், நாட்டியம், இசை இன்னும்உள்ள கலாநிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்தும் நடத்தியும் தருகிறோம், விற்பது, வாங்குவது, பணம் வசூல் செய்வது விளம்பரம் செய்வது ஆகிய தொழில் வேலைகளுக்கும், பஸ், ரயில், பிளேன் டிக்கட்டுகள், ஓட்டல் அறை வசதிகள் ஆகியவற்றை முன்னதாக ரிசர்வ் செய்யவும், மற்றும் உள்ள தேவைகளுக்கும் எங்கள் சேவை எப்பொழுதும் காத்திருக்கிறது.

முத்தமிழ் தொழிலகம்
3, ஜவகர்லால் நேரு தெரு, சென்னை—17.

நேர்மையற்ற சீனனை விரட்டியடிப்போம்

ஆகையினுல்தான் நல்லவர்களின் இரத்தம் வேண்டும். தூயவர்களின் இரத்தம் வேண்டும்; தோழர்களின் இரத்தம் வேண்டும்; தி. மு. கழகத்தாரின் இரத்தம் வேண்டும். அப்படி நீங்கள் இரத்தத்தைக் கொடுக்கின்ற நேரத்தில் முதலில் நமது அமைப்புச் செயலாளரிடத்திலோ, அல்லது தலைமைக் கழகத்திலோ போய் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு அதைக் கொடுக்கலாம்.

இதிலே ஒரு விதிவிலக்குக் கொடுத்தேன். சிறை சென்று மீண்டிருக்கின்ற தோழர்களுக்கு மட்டும் ஒருமாத காலத்திற்கு அந்த விதிவிலக்கு என்று நான் சொன்னேன்.

அந்த ஒரு மாதம் எனக்கு அதிகம் என்று படிகிறது. ஏனென்ருல் இப்போது வெளியே வந்தவுடன் நடக்கின்ற உற்சாகமான வரவேற்பைப் பார்க்கின்ற போது, ஒரு மாதமல்ல; ஒரே வாரத்தில் பழைய நிலை வந்துவிடும்போல் தோன்றுகிறது. ஒரு மாதம் என்று நான் சொன்னதை அவரவர்கள் வசதிக்குத் தக்கபடி குறைத்துக்கொள்ளலாம் ஆனுல் நீட்டிக் கொள்ள கூடாது.

ஒரு மாதத்திற்குள்ளாகவே அவர்கள் இரத்தத்தைக் கொடுக்க விரும்பினுல்கொடுக்கலாம். ஆனுல் ஒரு மாதமாகிலும் வேண்டுமானுலும் தரலாம். ஆனுல் ஒரு தடவை தான் தரவேண்டும் என்று அர்த்தமில்லை.

அதை நான் சொல்வதற்குக் காரணம், இந்தப் போராட்டத்திலே அவ்வளவு நாம் ஈடுபாடு கொண்டிருக்கிருேம் என்பதை நமக்கு நாமே உணர்த்திக் கொள்வதற்காக அதை நாம் செய்யவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அடுத்த மாதம் 8-ம் தேதி அன்றைய தினம், டெல்லியிலே இருக்கின்ற பாராளுமன்றத்திலேயும், தி. மு. க. சார்பில் நேருவுக்கு முன்னுல், உங்களது ஆணையைப் பெற்றுக் கொண்டு போய் உறுதியளிக்கவிருக்கிறேன்.

தி. மு. கழகத்தை நாட்டைக் காட்டிக்கொடுக்கும் கட்சி என்று யாரோ சில பேர் சொன்னுர்கள். தி .மு. கழகத்தைப் பொறுப்பறியாத கட்சி என்று யாரோ சில பேர் ஏசினுர்கள். பண்டித நேரு அவர்களே தி, மு. கழகமென்ருல் என்ன என்று தெரிந்து கொள்ளுங்கள். தி. மு கழகம் வடகிழக்கு எல்லையிலே வந்திருக்கின்ற பேராபத்தை மனதார உணர்ந்து, தன்னுடைய



விலைவாசிக் குறைப்பு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு மூன்று திங்கள் சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலை பெற்ற அறிஞர் அண்ணு—கலைஞர் கருணுநிதி ஆகியோரை தலை நகரம் விழாக் கொண்டாடி, கடற்கரையில் அவர்களை வரவேற்றபோது கலைஞர் கருணுநிதி அவர்களுக்கு "தென்னகத் தலைவன்" ஆசிரியர் தினகரன் கணையாழிஒன்று அன்பளிப்பாகக் கொடுத்த போது எடுத்த படம். அறிஞர் அண்ணு தென்னகத் தலைவனைப் படித்துக் கொண்டிருக்கிருர்.

கிளர்ச்சி நடவடிக்கையைக் கூட ஒத்திவைத்து உங்களுடன் ஒத்துழைக்கிறது என்று எடுத்துச் சொல்வதுதான் தி. மு. கழகத்தின் பெருமையை இப்போது இருப்பதைவிட பன்மடங்கு அதிகப்படுத்துவதாகும்.

அந்த ஆணையை அனுமதியை எனக்கு நீங்கள் அளிப்பீர்கள் என்று நான் கருதுகின்றேன். அதை நீங்கள் அளிப்பீர்கள் என்ற நம்பிக்கையிலே தான் அறிக்கை வெளியிட்டிருக்கிறேன்; அதைப்பற்றி பாராளுமன்றத்திலும் பேச இருக்கின்றேன்.

ஆனுல், நீங்கள் என்னைகேட்கலாம், உங்களுக்கு இந்த விஷயத்தில் இருக்கக்கூடிய அக்கறை காமராசருக்குக் காணுேமே, அவர் நாகப்பட்டினத்திற்கும், தஞ்சாவூருக்கும், மாயவரத்திற்கும், கும்பகோணத்திற்கும் போய் முனிசிபாலிடிகளை எப்படிப் பிடிப்பது என்றல்லவா திட்டம் போடுகிருர் என்று நீங்கள் சொல்லலாம்.

யார், யாரால் எது முடியுமோ, அதில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுகிருர்கள் என்று விட்டுவிட வேண்டுமே தவிர, அவர் இந்த நேரத்திலே முனிசிபாலிடியைப் பிடிக்கிருர் என்ருல் நான் அத்தோடு திருப்தியடையவில்லை.

மானம் பறிபோகாமல் இருக்க வேண்டும், மண்ணை மாற்ருன் பிடிக்காமல் இருக்க வேண்டும் என்று பேசிக் கொண்டிருக்கிறேன். அவர் முனிசிபாலிடியை எப்படிப் பிடிப்பது என்று திட்டம் போட்டிருக்கிருர். அதிலிருந்து அவர் எதற்கு லாயக்கு? நாம் எதற்குத் தகுதி என்பதை உலகம் தீர்மானித்துக் கொள்ளட்டும்.

ஆனுல், உள்ளபடி இந்தியத் துரைத்தனத்திற்குச் சொல்லுகிறேன்; போர் ஆர்வம் குன்ருமலிருக்க வேண்டுமானுல் அதற்கான நல்லாதரவு கிடைக்கவேண்டுமானுல், ஒரு கட்சிக்கும், மற்ருெரு கட்சிக்கும், ஏற்படுகின்ற மோதுதல்களை எந்த அளவிற்குக் குறைக்கிருேமோ அந்த அளவிற்கு நல்லது.

கட்சிகள் தங்களுடைய கொள்கைகளை விட்டுவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை, என்னுடைய கொள்கையை நான் விட்டுவிடத் தயாரிலில்லை.

ஆகையினுல் மற்ற கட்சிகளும் அவரவர்களுடைய கொள்கையை விட்டுவிடச் சொல்வது அறிவீனமாகும்.

ஆனுல் கொள்கைப் பூசல்களை, கொள்கை காரணமாக எழுகின்ற பூசல்களை நாம் ஓரளவிற்காவதுகட்டுப்படுத்தி வைக்காவிட்டால், போர் ஆதரவு முயற்சியிலே நாம் முழு மூச்சோடு ஈடுபடுவது கடினமாகும்.

ஆகையினுல், முடியுமானுல் இந்தத் தேர்தல்களை ஒத்தி வைக்க வேண்டும். இதைநான் பலமறிந்து சொல்லுகிறேன்; பலமறியாமலல்ல. சென்னை நகரத்திலே இன்றைய தினம் நடைபெற்ற இந்த மாபெரும் ஊர்வலத்தைப் பார்த்த பிறகு தேர்தலிலே யார் ஜெயிப்பார்கள் என்ற சந்தேகம் எந்தக் கருத்துக் குருடருக்கும் இருக்க முடியாது.

அதை நான் தெரிந்து சொல்லுகிறேன், இந்தத் தேர்தல்கள் போர் நிலை இருக்கக் கூடிய இந்த நேரத்தில் தேர்தல்கள் தள்ளி வைக்கப்பட வேண்டும். இல்லையேல் தேர்தல்களை நடத்தித்தான் தீர வேண்டும் என்ருல், இந்தத் தேர்தல்களிலே அரசியல் கட்சிகள் ஈடுபடாமல் சுயேட்சையாக நிற்கக்கூடியவர்கள், காரியத்தைப் பார்க்கக்கூடியவர்கள் தேர்தலிலே நிற்கலாம். ஒன்று அரசியல் கட்சிகள் பூசல் ஒதுக்கி வைத்துவிட்டுத் தங்க

கனக விஜயரின் கழுத்தொடித்த சேரன் பரம்பரை இங்கே! இங்கே!!

வேட்டை நாய்களை விரட்டியடிக்க விடுதலைப் படையே புறப்படு

ளுக்குள்ளே ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு, பூசல்களை மாற்றியமைக்க வேண்டும். வியாழக்கிழமை தேர்தலுக்காக காங்கிரசும் நானும் சண்டை போட்டுக்கொண்டு வெள்ளிக்கிழமை இரண்டு பேருமாக மக்களிடத்திலே போய் யுத்த நிதிக்குப் பணம் கொடுங்கள் என்று கேட்டால் மக்கள் நம்மைப் பார்த்து சனிக்கிழமை நீங்கள் இரண்டு பேரும் ஒன்ருகுங்கள். ஞாயிற்றுக்கிழமை பார்க்கலாம் என்று திருப்பி அனுப்புவார்கள்.

ஆகையினுல்தான் கட்சிகளுக்குள்ளே இந்தப் பூசல் ஏற்படாமலிருக்கத் தேர்தல்களை அவர்கள் தள்ளி வைக்க வேண்டும். அல்லது இந்தத் தேர்தல் முனிசிபாலிடிக்குத் தானே என்ற காரணத்தாலே அவைகளிலே அரசியல் கட்சிகள் புகத் தேவையில்லை என்பதாலே, அரசியல் கட்சிகளற்ற சுயேட்சைகளாக போட்டியிட வேண்டும்—என்று ஒரு நியதியையாவது ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதைப் போலவே திருச்சியிலே பத்திரிகை நிருபர்கள் என்னைப் பார்த்துக் கேட்டார்கள், "போரை வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்ருல், ஒரு தேசிய சர்க்கார் அமைக்க வேண்டும் என்கிருர்களே; அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன—என்று கேட்டார்கள்.

அதற்கு நான் அவர்களிடத்திலேயும் சொன்னேன். உங்களுக்கும் அதைச் சொல்லுகிறேன். "இந்த நேரத்திலே போரைச் சாக்காகக் காட்டி, பதவியிலே பங்கு கேட்க தி. மு. கழகம் அவ்வளவு அரசியல் ஈனத்தனத்தைப் பெறவில்லை.

போர்ப் பொறுப்புப் பூராவையும் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆட்சி நடத்துகின்ற காங்கிரஸ் கட்சிதான் ஏற்கவேண்டும்.

இந்த நேரத்தில் எல்லாக் கட்சிகளும் ஒன்ருகச் சேர்ந்து 'தேசிய சர்க்கார்' அமைப்போம் என்பதில் அர்த்தமில்லை; பயனுமில்லை,

ஆனுல் என்ன செய்யலாம் என்ருல், எந்த எதிர்க்கட்சியானுலும், இப்பொழுது இவனுக்கென்ன தெரியும் என்றும், அவனுக்கென்ன தெரியும்? என்றும், 'அவரைக் கூப்பிட மாட்டேன்' 'இவரைக் கூப்பிட மாட்டேன்'—என்றிருக்கிற அந்தப் போக்கிலே இராமல், ஒவ்வொரு கட்டத்திலேயும், எல்லாக் கட்சிகளையும் கொண்ட குழுக்களை அமைத்து, அந்தக் குழுக்களிலே விஷயங்களைப் பேசி, ஒத்துழைப்பைப் பெறவேண்டும் என்று இந்திய சர்க்காரை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த நேரத்தில், பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டதைப் போல், போரை காரணமாகக் காட்டி விலைவாசிகள் ஏறிவிடாமலும், கள்ளமார்க்கெட்காரன் முழுங்காமலும், கொள்ளை லாபம் அடிக்கப் பெருமலும் பாதுகாக்கவேண்டிய பெறும் பொறுப்பை சர்க்கார் மறந்துவிடக்கூடாது. அதற்கு எல்லாக் கட்சிகளின் ஆதரவையும் துரைத்தனத்தார் பெற்று, கள்ளமார்க்கெட் தலைதூக்காதபடி தடுத்துத் தீரவேண்டும்,

ஏனென்ருல், ரத்தத்தைச் சிந்திக்கொண்டும், பிணத்தைக் கீழே போட்டுக்கொண்டும், இராணுவ வீரர்கள் எல்லைப் புலத்திலே சண்டை போடுகின்ற நேரத்தில், 8 ரூபாய்க்கு வாங்கிய சரக்கை 80 ரூபாய்க்கு விற்கின்ற கொடியவர்கள் இருப்பார்களேயானுல், துரைத்தனத்தார் அப்படிப் பட்டவர்களைக் கடுமையாக அடக்கினுல்தான் மக்களுடைய மனதிலே ஒரு தூய்மையான எண்ணம் ஏற்படும்.

இப்படிப்பட்ட காரியங்களுக்கெல்லாம் தி. மு. கழகத்தை நாட்டை ஆளுகின்ற காங்கிரஸ் கட்சியினர் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனுல் அதே நேரத்தில் சிறை சென்று வந்திருக்கின்ற நமது நமது நண்பர்களையெல்லாம் பாராட்டுகின்றீர்கள். எதற்காகப் பாராட்டுகின்றீர்கள்? முதலமைச்சர் காமராசர் பேசுகிருர்; இதிலே என்ன பாராட்டு இருக்கிறது. இவர்கள் சிறைக்குப் போய் என்ன பெரிய கஷ்டத்தை அனுபவித்தார்கள்? இவர்களுக்குச் சிறையில் சலவையிலேயிருந்து சேவிங் வரையிலே ஓசி தானே!

ஒரு முதலமைச்சருடைய வாயில், பஸ் ஸ்டாண்டுச் சிறுவர்கள் வழக்கமாகப் பேசுகின்ற பதம் வந்தது உள்ளபடியே எனக்கு வெட்கமாக இருக்கிறது. பஸ் ஸ்டாண்டிலே உள்ள சிறுவர்கள் தான் காபி குடித்துவிட்டு வந்தால் 'என்ன ஓசி காப்பியா?'—என்பார்கள். ஒரு நாட்டை ஆளுகின்ற முதலமைச்சர் பதவிக்குத் தக்கபடி எண்ணி பாஷையையாவது இரவல் பெறக் கூடாதா என்று எண்ணி நான் உள்ளபடி வியப்படைகிறேன்.

'ஓசி'-என்று சொல்லுகிருர். இனுமாக — இலவசமாகப் பெறுகிருர்கள் என்று சொல்லுகிருர்.

நான் அவரைக் கேட்க ஆசைப்படுகிறேன். இது கருணுநிதி போன பிறகா? காமராசர் போன காலத்திலேயுமா?'— என்று அறிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்:

சலவையிலே இருந்து சேவிங் வரையிலே 'ஓசி' என்று சொல்லுகிற காமராசர், விருதுநகரில் இவரது திரண்ட செல்வத்திலேயிருந்து அவர் 3000 நாட்கள் தங்கியிருந்த ஜெயிலில் வேளா வேளைக்குச் சோறுக்குப் பணம் கொடுத்து, சேவிங்கிற்குப் பணம் கொடுத்து, சலவைக்குப் பணம் கொடுத்து பணம் கட்டியதாக ஒரு கணக்கு இருக்கிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அப்போது இல்லை; கொடுக்கவில்லை; என்று சுருக்கமாகப் பதில் சொன்னுல், 'அப்பொழுது இல்லை; கொடுக்கவில்லை' இப்போது மாதா மாதம் 1500 வாங்குகிறீர்கள் பழைய கடனைக் கட்டுங்கள். மூவாயிரம் நாட்கள் ஜெயிலில் 'ஓசி' சோறு, ஓசி சலவை, ஓசி சேவ் பெற்றிருப்பவர் அந்தப் பழைய கடனை அவர் கட்டினுல், நாங்கள் பட்ட கடனை அணு, பைசா குறையாமல் கட்டத் தயாராக இருக்கிருேம். முதலில் பழைய கடனைக் கட்டுங்கள்.

நான் இதைச் சொல்ல நேரிட்டதற்காக வருந்துகிறேன். ஆனுல் காமராசர் இப்படிப்பட்ட விதத்திலே மக்களிடத்தில் கேவலப் படுத்திக் காட்டலாம் என்று கருதுகிருரே தவிர, மக்கள் நாம் சிறைச்சாலைக்குச் சென்றதைக் கேவலமாகக் கருதுவார்களேயானுல் இப்படிப்பட்ட மக்கள் வெள்ளமா கூடும்? இப்படிப் பட்ட மாபெரும் ஊர்வலமா நடக்கும்?

கதையிலே கூறுவார்கள்; 'தேவர்கள் பூமாலை பொழிந்தார்கள்' — என்று. அவர்கள் எந்தப் பூவை மாரியாகப் பொழிந்தார்களோ தெரியாது. வழிநெடுக மக்கள் எந்த அளவு கையில் வலுவிருக்கிறதோ, அந்த அளவிற்கல்லவா பூவை வாரி வாரி இறைத்தார்கள்,

பூவையா வாரி இறைத்தார்கள்! அன்பையல்லவா வாரி இறைத்தார்கள்! அன்பை வாரி இறைத்தார்கள், தங்கள் இதயத்தையல்லவா எடுத்துத் தந்தார்கள், இது ஓசிச் சோறு சாப்பிட்டு வந்தவர்கள் என்ற நினைப்பிலா செய்திருப்பார்கள்?

ஆகையினுல், காமராசர் இனிமேல் அப்படிப்பட்ட கேவலமான செயல்களில் நடந்து கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைத் தொடர்ந்து நான் ஒன்று சொல்லுவேன், "போரிலே நல்ல வெற்றி கிடைக்க வேண்டுமானுல், தகுதியறிந்து — இடத்திற்கு ஏற்றவர்களை இடத்திலே அமர்த்துகிற காரியத்தில் இந்திய சர்க்கார் முன்னிற்கவேண்டும்.

நாடுபிடிக்க வந்த சீன வெறிப்படை எங்கே! எங்கே! எங்கே!

காமராசரை நீக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனல் நான் சொல்வது இடமறிந்து அதற்கு ஏற்றவர்களை அந்த இடத்திலே அமர்த்த வேண்டும். அதனுல் தான் வேலையிலிருந்து நீங்கி ஓய்வு பெற்றிருக்கின்ற கரியப்பா போன்றவர்களை, திரும்ப வேலைக்கு வாருங்கள் என்று அழைக்கிருர்கள்.

என்ன காரணம்? அவர்களுக்கு யுத்தத்தைப் பற்றி நெளிவு, சுளிவு தெரியும். சிக்கல்களை அவர்கள் அறிவார்கள். ஆகையினுல் வாருங்கள் என்று அழைப்பார்கள்; அதைப் போல் ஒரு யுத்தம் ஏற்பட்டிருக்கின்ற நேரத்தில் நாட்டு மக்கள் அனைவரையும் அணைத்துச் செல்லக்கூடியவர் முதலமைச்சராக இருக்க வேண்டும். அல்லது இந்த முதலமைச்சரே 'அந்தசுபாவத்தை நான் பெற்றுக்கொள்கிறேன்' — என்ருல் என்னைவிட மகிழ்ச்சி அடையக் கூடியவர்கள் யாரும் இருக்க முடியாது.

ஏனென்ருல் தனிப்பட்ட முறையில் அவர் எனக்கு மிக வேண்டியவர்; நண்பர். நான் அவரை நீக்கவேண்டும் என்று சொல்லவில்லை. அவருடைய உள்ளத்துக்குள்ளே இருக்கிறதே, ஒரு தவருன எண்ணம் அதை நீக்க வேண்டும். இது அனைவரையும் அணைத்துச் செல்ல வேண்டிய நேரம். இந்த நேரத்திலே தி. மு. கழகத்தைப் பற்றித் தாறுமாருகப் பேசிக்கொண்டிருந்தால், நான் எப்படி இவர்களுக்காக கட்டுப்படுத்திக் கொண்டிருப்பது? இவர்களும் ஒரு பக்கத்திலே ஏச, அவர்கள் இன்னொரு பக்கத்திலே பேச, இரண்டையும் மக்கள் கேட்டுக்கொண்டிருப்பார்களேயானுல், யுத்த முயற்சிக்கான ஒற்றுமையான கருத்து எங்கிருந்து பரவும்?



கழகத்தின் கட்டளைப்படி ஜூலை மாதம் 19-ந் தேதி விலைவாசிக் குறைப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்று—தமிழக அரசினரின் ஆணவப் போக்கிற்கு பலியான கொள்கை வீரன் கோ. சு. மணியின் கல்லறைக்கு கலைஞர் கருணுநிதி அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் காட்சி.

அந்த மாவீரன் கல்லறைக்கு மரியாதை செலுத்தி நிற்கும் இலட்சிய நடிகர், எஸ். எஸ். ஆர், அரங்கண்ணல், கிருஷ்ணமூர்த்தி, ஜெகதாம்பாள்-வேலாயுதம்—மற்றும் நமது கழக எம். எல். ஏக்கள் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

ஆகையினுல்தான், நான் முதலமைச்சருக்கும் சொல்லுகிறேன். அவரைச் சார்ந்த காங்கிரஸ் நண்பர்களுக்கும் சொல்லுகிறேன், "இன்றைய தினம் பொது எதிரி வந்திருக்கின்ற நேரத்தில், சில்லரைப் பூசல்களை மறந்து ஒன்றுபட்டு உழைக்க வரவேண்டும்.

தி. மு. கழகம் நேசக்கரத்தை நீட்டிய நேரத்திலெல்லாம், அதைப் பற்றிக்கொண்ட யாரும், தவருன பாதைக்கு இழுத்துச் செல்லப்பட்டதில்லை. இன்றையத் தினமும் தி. மு. கழகம் நேசக்கரத்தை நீட்டுகிறது. எந்தக் கரத்தைத் தடியால் அடித்தீர்களோ, அதே கரத்தை அன்போடு நீட்டுகிறது.

எந்தக் கரத்தில் சட்டியைக் கொடுத்தீர்களோ சிறைச்சாலையில்! அதே கரத்தை நீட்டுகிறது,

எந்தக் கரத்தினுலே சோளக் கஞ்சியை வாங்கிக் குடித்தார்களோ அதே கரத்தை நீட்டுகிறது.

அதற்குக் காரணம் என்னவென்ருல், கரத்திலே கறைப்பட்டிருந்தாலும், கருத்திலே ஒரு துளியும் கறை இல்லாதவர்கள் தி. மு. கழகத்தார்.

[அடுத்த இதழில் முடியும்]

இந்தியா ஒரு நாடல்ல! அது ஒரு துணைக்கண்டம்! இதைச்சொல்லி அலுத்துப் போனேம்-சொரணை இல்லை காங்கிரசாருக்கு
விடுதலை உணர்வுக்கு எதிர்ப்பாம்! விளையாட்டுக் காட்டுகிருர்கள்!
அரசியல் கோபுரத்தின் உச்சியில் குடியிருப்போரிலிருந்து~நாலணுக் காசுக்கு நாக்கு வியாபாரம் செய்யும் கூலிப்படைவரை
'தேசிய ஒருமைப்பாடு' பற்றித் திசைக்கொன்ருகப் பேசிவருகிருர்கள்!
இந்த நேரத்தில் 'உளுத்துப்போன ஒருமைப்பாடு' பற்றிக் கழகத் தோழர்கள் நல்லதோர் விளக்கம்பெற~விவாதிக்க—
— வரலாற்று ஆதாரங்களுடன்... நமது "அப்பா" எழுதுகிருர் தொடர் கட்டுரை.

தேசிய ஒருமைப்பாடும்-திராவிட நாடும்

11-11-62, தென்னகத் தலைவன் இதழில் ஆரம்பமாகிறது.
கழகக் கண்மணிகளே! இந்தக் கையகராதியைத் தொகுத்து வைத்துக்கொள்ளத் தவறிவிடாதீர்கள்!
வாரந்தவருது இதழ் கிடைக்க, உங்களூர் விற்பனையாளர்களிடம் இன்றே சொல்லிவையுங்கள்.
JAYA